நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW Federation of Tamil Schools Inc.

# 2020

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

### தரம்: ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3, 4)

**Level : Basic (Year 3 & 4)**

**வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்**

Time Given : 60 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

November 2020

**For questions 1 to 4 choose the word (s) that best describe action shown in the pictures.**

**1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.**

1. யானை குளத்தில் ___________

அ) தூங்குகிறது

ஆ) விளையாடுகிறது

இ) உண்கிறது

ஈ) குளிக்கிறது



2. குதிரை சத்தமாகக் ___________

அ) கனைக்கிறது

ஆ) கர்ச்சிக்கிறது

இ) குரைக்கிறது

ஈ) ஊளையிடுகிறது



3. கண்ணன் புத்தகம் ___________

அ) இருக்கிறான்

ஆ) ஓடுகிறான்

இ) படிக்கிறான்

ஈ) குடிக்கிறான்



4. ரயில் வேகமாக ___________

அ) இருக்கிறது

ஆ) பறக்கிறது

இ) பாடுகிறது

ஈ) ஓடுகிறது



**Read and understand the given poem and answer questions 5 to 8**

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து 5 முதல் 8 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

சின்னஞ் சிறு குருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா
பாலைப் பொழிந்து தரும் பாப்பா – அந்த
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா

5. இப்பாடலைப் பாடியவர் யார்?
அ) இளங்கோ
ஆ) திருவள்ளுவர்
இ) கம்பர்
ஈ) பாரதியார்

6. இப்பாடலில் "பாப்பா" என கவிஞர் யாரைக் குறிப்பிடுகிறார்?
அ) மகன்
ஆ) மகள்
இ) குழந்தைகள்
ஈ) பறவைகள்

7. சின்னஞ் சிறு குருவி போல என்ன செய்ய வேண்டும்?
அ) திரிந்து பறந்து வர வேண்டும்
ஆ) மரத்தில் இருக்க வேண்டும்
இ) பாட வேண்டும்
ஈ) விளையாட வேண்டும்

8. எமக்குப் பாலைத் தருவது எது?
அ) நாய்
ஆ) பசு
இ) பூனை
ஈ) நரி

**For questions 9 to 12 choose the word that is closest in meaning to the word underlined**

**9 முதல் 12 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லிற்கு ஒத்த சொல்லைத் தெரிவு செய்க.**

9. கண்ணன் **புன்னகை** செய்தான்.

அ) பார்த்தான்

ஆ) சிரித்தான்

இ) அழுதான்

ஈ) ஓடினான்

10. வெயில் மிக **சூடாக** உள்ளது.

அ) குளிராக

ஆ) வெப்பமாக

இ) இருளாக

ஈ) கருமையாக

11. எனது **வீடு** அழகானது.

அ) கோவில்

ஆ) பாடசாலை

இ) இல்லம்

ஈ) கடை

12. எல்லோரும் தண்ணீர் **பருகுங்கள்.**

அ) குடியுங்கள்

ஆ) கொட்டுங்கள்

இ) சூடாக்குங்கள்

ஈ) குளியுங்கள்

**For question 13 to 16 choose the word with the opposite meaning to the word underlined in the sentence**

**13 முதல் 16 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொற்களுக்கு எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க.**

13. காகத்தின் நிறம் **கருமை**.

அ) நீலம்

ஆ) பச்சை

இ) வெண்மை

ஈ) சிவப்பு

14. ஓட்டப் பந்தயத்தில் ஆமை முயலை **<u>வென்றது</u>**.

அ) தோற்றது

ஆ) ஓடியது

இ) உறங்கியது

ஈ) விளையாடியது

15. மாம்பழம் மிகவும் **<u>இனிமையானது</u>**.

அ) கறுப்பானது

ஆ) கசப்பானது

இ) அழகானது

ஈ) வெள்ளையானது

16. தொலைக்காட்சி பார்ப்பது **<u>இன்பமானது</u>**.

அ) கலகலப்பானது

ஆ) துன்பமானது

இ) கெட்டது

ஈ) நலலது

**Choose the correct answer for questions 17 to 21.**

**17 முதல் 21 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்துத் எழுதுக.**

17. சிங்கம் ஒரு ________________________________________ .

அ) வீட்டு மிருகம்

ஆ) நீர்வாழ் உயிரினம்

இ) காட்டு மிருகம்

ஈ) பறவையினம்

18. செல்லப் பிராணியாக வீட்டில் வளர்க்கக்கூடிய பிராணி எது?

அ) புலி

ஆ) நரி

இ) சிங்கம்

ஈ) நாய்

19. நீர்வாழ் உயிரினம் எது?

அ) சிங்கம்

ஆ) மீன்

இ) நாய்

ஈ) யானை

20. உங்கள் அம்மாவின் அப்பாவை எப்படி அழைப்பீர்கள்?

அ) சித்தப்பா

ஆ) பெரியப்பா

இ) மாமா

ஈ) தாத்தா (அம்மப்பா)

21. தமிழர்கள் தீபாவளிப் பண்டிகையை எந்த மாதத்திற் கொண்டாடுவார்கள்?

அ) தை

ஆ) சித்திரை

இ) ஐப்பசி

ஈ) மார்கழி

**For questions 22 to 23 choose the word that has the closest meaning to the underlined word.**
**22 முதல் 23 வரையான வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.**

22. வாணியின் குறிப்புப் புத்தகத்தில் பல **சுவையான தகவல்கள்** இருந்தன.

அ) தேவையில்லாத தகவல்கள்

ஆ) சில தகவல்கள்

இ) சுவாரசியமான தகவல்கள்

ஈ) பிழையான தகவல்கள்

23. அண்ணா **இலகுவான** முறையில் கணக்கைச் செய்து காட்டினார்.

அ) அழகான

ஆ) சுலபமான

இ) கடினமான

ஈ) தவறான

**For question 24, Choose the word that has the opposite meaning to the underlined word.**
**கோடிட்ட சொல்லுக்கு எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க.**

24. குரங்கிற்கு **<u>நீண்ட</u>** வால் இருக்கிறது

அ) தடித்த

ஆ) குறுகிய

இ) மெல்லிய

ஈ) அழகான

**For questions 25 to 27, choose the correct word to complete the sentence.**
**25 முதல் 27 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.**

25. நான் இப்போது தமிழ்ப் பாடசாலையில் தமிழ் ______________________.

அ) படிப்பேன்

ஆ) படிக்கின்றேன்

இ) படித்தேன்

ஈ) படிக்கமாட்டேன்

26. நான் அடுத்த வருடம் மெல்பேன் சித்தப்பா வீட்டிற்குச் _________________ .

அ) சென்றேன்

ஆ) செல்வேன்

இ) சென்று வந்தேன்

ஈ) சென்றுவிட்டேன்

27. நேற்று எனது தங்கை அழகாகப் பாட்டுப் ________________________ .

அ) பாடுவாள்

ஆ) பாடினாள்

இ) பாடுகின்றாள்

ஈ) பாடப்போகிறாள்

**For questions 28 to 30, choose the correct word that is spelt incorrectly in the given sentence.**

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்தில் உள்ள எழுத்துப் பிழையான சொல்லின் சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

28. தாத்தா தினமும் வாலைப்பழம் விரும்பிச் சாப்பிடுவார்.

அ) சாப்பிடுவார்

ஆ) தாத்தா

இ) வாழைப்பழம்

ஈ) தினமும்

29. சென்ற ஆண்டு எமது கழைவிழா நன்றாக நடந்தது.

அ) ஆண்டு

ஆ) கலை விழா

இ) நடந்தது

ஈ) எமது

30. எனது அம்மாவின் கன்கள் அழகாக இருக்கும்.

அ) கண்கள்

ஆ) அம்மாவின்

இ) எனது

ஈ) அழகாக

**For question 31, choose the response that combines the sentence in the best way.**

**31. கீழே தரப்பட்ட வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.**

(1) அங்கே பலவிதமான மிருகங்களை நாம் பார்த்து மகிழ்ந்தோம்.
(2) அப்பா எங்கள் எல்லோருக்கும் மதிய உணவு வாங்கித் தந்தார்.
(3) நாங்கள் அப்பாவுடன் காலை நேரம் அங்கே சென்றோம்.
(4) விரும்பிய காட்சிப் பொருட்களை விலைக்குப் பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றோம்.
(5) சிட்னியில் மிருகக்காட்சிச்சாலை ஒன்று உண்டு.

அ) (2), (1), (3), (5), (4)

ஆ) (3), (4), (1), (2), (5)

இ) (5), (3), (1), (2), (4)

ஈ) (1), (4), (3), (5), (2)

**Read and understand the given poem and answer questions 32 to 36.**
**கீழே தரப்பட்ட கவிதையை வாசித்து 32 முதல் 36 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

"அ" னா, "ஆ" வன்னா உயிரெழுத்து
அவற்றின் எண்ணிக்கை பன்னிரண்டு
"க்" கன்னா, "ங்" கன்னா மெய்யெழுத்து
அவற்றின் எண்ணிக்கை பதினெட்டு

இரண்டும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்து
எண்ண வருவது இருநூற்றிப் பதினாறு
இளமையிற் கல்வி சிலையில் எழுத்தென
அறியத் தருகிறார் ஆசிரியை

மூன்று குற்றில் ஓர் எழுத்து
ஆயுத எழுத்தாம் அ.்.கேனம்
ஒன்றுசேர்த்தால் இருநூற்றி நாற்பத்தியேழு
தமிழில் எழுத்துக்கள் அறிவோம் நாமே

இயற்றியவர் :- தணிகா திரு

32. உயிர் எழுத்துக்கள் எவை?
அ) க், ங்.....
ஆ) அ, ஆ....
இ) ம, ழே....
ஈ) ∴ , ஷ

33. மெய் எழுத்துக்கள் எவை?
அ) ஓ, ஊ
ஆ) ய, ர
இ) க், ங்
ஈ) னெ, ணே

34. “அ.ஃ.கேனம்” என்பது

அ) ஆயுத எழுத்து

ஆ) மெய் எழுத்து

இ) உயிர் எழுத்து

ஈ) உயிர்மெய் எழுத்து

35. தமிழில் எத்தனை எழுத்துக்கள் இருப்பதாக நாம் அறிவோம்?

அ) பன்னிரண்டு

ஆ) பதினெட்டு

இ) இருநூற்றிப் பதினாறு

ஈ) இருநூற்றி நாற்பத்தியேழு

36. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பதன் கருத்து

அ) சிறிய வயதில் படிப்பது நல்லது. மனதில் நன்றாகப் பதியும்.

ஆ) சிறிய வயதில் படிப்பது கூடாது.

இ) சிறிய வயதில் படிக்காமல் விளையாட வேண்டும்.

ஈ) சிறிய வயதில் படிக்கத் தேவையில்லை

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

**Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination**

# 2020